# செய்தி வெளியீடு

**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு "அனைவருக்கும் காப்புறுதி: பாதுகாப்பான எதிர்காலத்திற்காக" என்ற தேசிய கருப்பொருளின் கீழ், குருநாகல் மற்றும் குளியாப்பிட்டியாவில் காப்புறுதி விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைக்கின்றது.**

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு (IRCSL), இலங்கை காப்புறுதி சங்கத்துடன் இணைந்து, தனது நாடளாவிய காப்புறுதி விழிப்புணர்வு செயற்பாட்டின் தொடர்ச்சியாக, 2026 ஜூலை 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் குருநாகல் மற்றும் குளியாப்பிட்டியாவில் இரண்டு முக்கிய பொதுமக்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துவதில் மகிழ்ச்சி அடைகிறது.

"அனைவருக்கும் காப்புறுதி: பாதுகாப்பான எதிர்காலத்திற்காக" என்ற தேசிய கருப்பொருளின் கீழ் நடைபெறும் இந்த முயற்சி, காப்புறுதி தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துதல், நிதிசார் அறிவாற்றலை வலுப்படுத்துதல் மற்றும் இலங்கை முழுவதும் உள்ள சமூகங்களிடையே காப்புறுதி சேவைகளின் உள்ளடக்கத்தை விரிவுபடுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் அரச துறை அதிகாரிகள், வணிகத் துறை பிரதிநிதிகள், வங்கியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் சார்ந்த பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் பங்கேற்கவுள்ளனர். இந்நிகழ்வுகளின் மூலம் காப்புறுதியின் முக்கியத்துவம், காப்புறுதிதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள், கிடைக்கக்கூடிய பல்வேறு காப்புறுதி தயாரிப்புகள், மேலும் எதிர்பாராத நிதி இடர்களிலிருந்து தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் வணிகங்களைப் பாதுகாப்பதில் காப்புறுதியின் பங்கு குறித்து நடைமுறை சார்ந்த அறிவு வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் அட்டவணை பின்வருமாறு:

- **2026 ஜூலை 23** – மாகாண சபை கேட்போர் கூடம், குருநாகல்

  அமர்வு 1: காலை 9.30 – நண்பகல் 12.30

  அமர்வு 2: பிற்பகல் 1.30 – மாலை 4.30

- **2026 ஜூலை 24** – இலங்கை வயம்ப பல்கலைக்கழகம், குளியாப்பிட்டிய

  நேரம்: காலை 9.30 – நண்பகல் 12.30

குருநாகல் நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக, விழிப்புணர்வு அமர்வுகளுடன் இணைந்து நாள் முழுவதும் காப்புறுதித் துறை சாலை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதில் இலங்கையில் உரிமம் பெற்றுள்ள 29 காப்புறுதி நிறுவனங்களும் பங்கேற்கவுள்ளன. இதன் மூலம் பொதுமக்கள் ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி நிறுவனங்களின் காப்புறுதி ஆலோசகர்களை நேரடியாகச் சந்திக்கும் அரிய வாய்ப்பைப் பெறுவர்.

பொதுமக்கள் பல்வேறு காப்புறுதி தயாரிப்புகள் மற்றும் சேவைகள் குறித்து அறிந்துகொள்ளவும், காப்புறுதி தொடர்பான தங்களது கேள்விகளுக்குத் தெளிவுபெறவும், துறைசார் நிபுணர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெறவும் முடியும். மேலும், காப்புறுதி துறையுடன் தொடர்புடைய ஏனைய முக்கிய பங்குதாரர்களும் இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ளதால், காப்புறுதித் துறை மற்றும் அது வழங்கும் சேவைகள் குறித்த விரிவான புரிதலை பொதுமக்கள் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த சாலை நிகழ்ச்சியின் மற்றொரு சிறப்பம்சமாக தொழில் வழிகாட்டல் மேசைகள் அமைக்கப்படவுள்ளது. இதன் மூலம் மாணவர்கள், பட்டதாரிகள் மற்றும் வேலைவாய்ப்பை நாடுபவர்கள் காப்புறுதித் துறையில் உள்ள தொழில் வாய்ப்புகள் குறித்து அறிந்துகொள்ளவும், தொழில் வழிகாட்டல் ஆலோசனைகளைப்

பெறவும், தங்களது சுயவிபர ஆவணத்தை (Curriculum Vitae – CV) நேரடியாக பங்கேற்கும் காப்புறுதி நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கவும் முடியும்.

காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தும் அமைப்பு என்ற ரீதியில் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, குருநாகல் மற்றும் குளியாப்பிட்டியாவில் காப்புறுதி முகவர்கள் மற்றும் ஆலோசகர்களுக்காக விசேட விழிப்புணர்வு அமர்வுகளையும் நடத்தவுள்ளது. இவ்வமர்வுகளில் தொழில்முறை ஒழுக்கநெறிகள், தொழில்முறை தரநிலைகள், ஒழுங்குமுறைத் தேவைகள் மற்றும் சிறந்த நடைமுறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்படும். இதன் மூலம் காப்புறுதிதாரர்களுக்கு வழங்கப்படும் சேவையின் தரத்தை மேலும் மேம்படுத்துவது நோக்கமாகும்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, நாட்டில் காப்புறுதியின் பரவலை அதிகரிப்பதற்கும், நிதிசார் தயார்நிலை குறித்த கலாசாரத்தை நாடு முழுவதும் ஊக்குவிப்பதற்குமான இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் விரிவான தேசிய மூலோபாயத்தின் ஒரு பகுதியாகும். மேலும், கல்வி மற்றும் விழிப்புணர்வின் ஊடாக நுகர்வோரின் நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கும், நிதி ஸ்திரத் தன்மையை மேம்படுத்துவதற்குமான ஆணைக்குழுவின் தொடர்ச்சியான முயற்சிகளுக்கும் இம்முயற்சி ஆதரவளிக்கிறது.

இம்முயற்சி, இலங்கை காப்புறுதி சங்கம், இலங்கை காப்புறுதி தரகர்கள் சங்கம், இலங்கை காப்புறுதி நிறுவனம் உள்ளிட்ட காப்புறுதி துறையின் முக்கிய பங்குதாரர்களின் செயற்பாட்டு ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது, காப்புறுதி தொடர்பான அறிவையும் சேவைகளையும் பொதுமக்களிடம் விரிவாகக் கொண்டு சேர்ப்பதற்கான காப்புறுதி துறையின் கூட்டு அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது.

இந்நிகழ்ச்சிகள், நாட்டின் பல்வேறு பகுதிகளில் முன்னர் வெற்றிகரமாக நடத்தப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அந்த நிகழ்ச்சிகள், செயலமர்வுகள், கல்வி அமர்வுகள் மற்றும் சமூக ஈடுபாட்டு நடவடிக்கைகள் மூலம் ஆயிரக்கணக்கான மக்களை சென்றடைந்துள்ளன. இலங்கையின் ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் காப்புறுதி கல்வியை கொண்டு செல்லும் நோக்கில், மாவட்ட மட்டத்திலான இத்தகைய நிகழ்ச்சிகளை தொடர்ந்து விரிவுபடுத்த இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பொதுமக்களும், ஆர்வமுள்ள அனைத்து பங்குதாரர்களும் கலந்துகொண்டு, காப்புறுதி எவ்வாறு நிதிப் பாதுகாப்பையும் நீண்டகால நல்வாழ்வையும் உறுதிப்படுத்த உதவுகிறது என்பதைப் பற்றிய பயனுள்ள அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆணைக்குழு அன்புடன் அழைக்கிறது.

**சந்தை மேம்பாடு மற்றும் வெளித் தொடர்புகள் பிரிவு**
**இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு**
**11ஆம் மாடி, கிழக்கு கோபுரம்**
**உலக வர்த்தக மையம்**
**கொழும்பு 01**

| | |
|---|---|
| இணையத்தளம்: www.ircsl.gov.lk | மின்னஞ்சல்: info@ircsl.gov.lk |
| தொலைபேசி: 011 2396184 - 9 | பக்ஸ்: 011 2396190 |

22/07/2026